# ஆலயங்களில் இசை

*ர.ராஜா*
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

**ஆய்வுச் சுருக்கம்**

ஆயகலைகள் மொத்தம் அறுபத்து நான்கு என்பர். இந்த அறுபத்து நான்கினுள் இசைக்கலை மனிதனின் வாழ்க்கையோடு அமைந்த கலையாகத் திகழ்கிறது. இசை மனதிற்கு இன்பத்தையும், மகிழ்வையும் தருகிறது. இசையைப் பரப்ப மன்னர்கள், கவிஞர்கள் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். இசைத்தமிழ் என்பது பண்ணொடு கலந்து, தாளத்தோடு கூடி இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களாலும், தமிழ்ப் பாட்டுக்களாலும் இயன்ற இலக்கியங்களும், இலக்கணங்களும் ஆகும். அக்காலத்தில் மன்னர்கள் பல கோயில்களைக் கட்டி வைத்து அவற்றில் தினமும் பூசை நேரங்களில் இசையைப் பாட ஓதுவார்களையும், நடன மங்கையர்களையும் நியமித்து இசையை வளர்த்தனர். அவ்வாறு திகழும் ஆலயங்களின் வழிபாடுகள், வழிபாட்டின்போது நடைபெறும் சிறப்புப் பூசைகள், விழாக்கள் ஆகியவற்றில் இசையின் பங்கு அளப்பரியது. இவ் ஆய்வு சமகாலத்தில் ஆலய வழிபாட்டு முறையில் இசையின் வகிபங்கை ஆராயும் நோக்கில் கள அவதானிப்பை அடிப்படையாகக்கொண்டு பண்பு சார்அணுகுமுறையில் ஆராயப்பட்டது. கல்வியலாளர்கள், சமயம் சார்ந்தோர் மற்றும் ஆய்வாளர்கள் போன்றோருக்குப்பயனுடையதாக அமையும்.

**திறவுச் சொற்கள்** – ஆய கலைகள், இசைத்தமிழ், ஓதுவார், வழிபாட்டுமுறை